# News Release

# அபராதச் சீட்டைத் தவிருங்கள், வரம்புக்குள் செல்லுங்கள்!

*தானியங்கி வேகக் கட்டுப்பாட்டு கேமராக்கள் இப்போது வாகனில் நேரலையில்*

**வாகன், ஒன். (ஏப்ரல் 23, 2025)** – இன்று சமூகப் பாதுகாப்புக்கான எங்கள் அர்ப்பணிப்பில் மேலும் ஒரு மைல்கல்லை வாகன் நகரம் எட்டியுள்ளது! தானியங்கி வேகக் கட்டுப்பாட்டு கேமராக்கள் இப்போது வாகனில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் உட்பட நமது மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய குடியிருப்பாளர்களில் சிலர் இருக்கும் பகுதிகளில் நேரலையில் உள்ளது - நேரலை, வேலை மற்றும் விளையாட்டு.

இப்போது நகரெங்கும் சமூகப் பாதுகாப்பு மண்டலங்களில் நமது 10 நகரும் கேமராக்கள் நேரலையில் உள்ள இடங்களை அடையாளம் காட்டுவதற்காக அடையாளப் பலகை வைக்கப்பட்டுள்ளன. வேகம் கவலையளிக்கக்கூடிய பகுதிகளை அடையாளம் காண்பதற்காக ஒட்டுமொத்த போக்குவரத்து அளவு, முந்தைய விபத்துகள், பள்ளிக்கூடங்கள், பூங்காக்கள், சமூக மையங்கள், நூலகங்கள், நடைபாதைகள் மற்றும்/அல்லது மிதிவண்டி வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இடங்களுக்கு முன்னுரிமை அளித்து தரவுரீதியான அணுகுமுறையைப் பயன்படுத்தி இடங்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. முதலாம் ஆண்டில், நகரெங்கிலும் முக்கியப் பகுதிகளில் நகரும் கேமராக்கள் சுழலவிடப்படும்.

வேக வரம்பை அமல்படுத்த ஒரு கேமராவையும் வேக அளவீட்டுக் கருவியையும் தானியங்கி வேகக் கட்டுப்பாடு பயன்படுத்துகிறது. ஒரு வாகனம் ஒட்டப்பட்டுள்ள வேக வரம்பைத் தாண்டினால், மாகாணக் குற்றப்பிரிவு அதிகாரியின் ஆய்வுக்கென கணினி அமைப்பு ஒரு படம் பிடிக்கும். குற்றத்தின் படச் சான்று, உரிம எண் மற்றும் அதற்கான அபராதச் சீட்டு போன்றவை வாகன உரிமையாளருக்கு (வாகனம் ஓட்டியது யாராயிருந்தாலும்) 30 நாட்களுக்குள் அஞ்சல் செய்யப்படும்.

உள்ளூர்ச் சாலைகளில் வேகத்தைக் குறைக்கவும் அனைத்துப் பயனர்களுக்கும் பாதுகாப்பான சாலை வலைத்தொடர்புக்குப் பங்களிப்பதிலும் பிற அதிகார எல்லைகளில் இந்த அமைப்பு திறம்படப் பயன்படுத்தப்பட்டு வருவதை ஆதாரமும் ஆராய்ச்சியும் சுட்டிக்காட்டுகின்றன. குடியிருப்பாளர்கள் ஏற்கெனவே வாகனில்

# News Release

வேகம் காட்டும் கேமராக்கள் இருப்பதைப் பார்த்திருக்கலாம். ஏனென்றால் யார்க் பிரதேசத்தில் இத்திட்டம் சில பிராந்தியச் சாலைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

பிற சாலைப் பாதுகாப்பு முறைகள், யுக்திகளுடன் இணைந்து செயல்படுவதற்காக தானியங்கி வேகக் கட்டுப்பாடு வடிவமைக்கப்படுகிறது. இதில் சாலை வடிவமைப்புகள், கல்வி முன்முயற்சிகள், பாரம்பரிய காவல்துறை அமலாக்கம் ஆகியவை அடங்கும். இந்த MoveSmart நகர்வு மேலாண்மை யுக்தி வாயிலாக வாகனில் வேகத்தைக் குறைப்பதற்கு நகரம் செயல்படக்கூடிய பல வழிகளில் ஒன்றாக இந்தத் திட்டம் உள்ளது. இது பத்திரமான, மேலும் திறன்மிக்க நீடித்த போக்குவரத்து அமைப்பை வழங்குவதற்கான நகரத்தின் தொலைநோக்குப் பார்வையை உருவாக்கவும் வழிகாட்டவும் உதவுகின்றது.

இத்திட்டம் குறித்து மேலும் அறியவும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான விடைகளைக் காணவும் vaughan.ca/**ASE** வருகைதாருங்கள்.

**மேற்கோள்**
"இந்நகர மேயராக, நமது சமூகத்தைப்பாதுகாப்பது எனது முன்னுரிமைகளில் ஒன்று. இதில் அனைத்துச் சாலைப் பயனர்களும், அவர்கள் வாகனத்தில் சென்றாலும் தெருவில் நடந்து செல்வதாயிருந்தாலும் பத்திரமாக உணர்வதை உறுதிசெய்வது அடங்கும். இன்று, வாகன் நகரத்தின் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டம் நமது நகரெங்கிலும் 10 சமூகப் பாதுகாப்பு மண்டலங்களில் விரைவு கேமராக்களுடன் நேரலைக்கு வருவதன் மூலம் புதிய கட்டத்துக்குள் நுழைகிறது. வேகமெடுத்தல் என்பது பொறுப்பற்ற செயல் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் இதனால் - வேகக் குறைப்பு, சாலை விதிகளைப் பின்பற்றுதல், பள்ளிக்குப் போகவும் வரவுமாக இருக்கும் மாணவர்கள் உட்பட மிகவும் பாதிக்கப்படக்கூடிய சாலைப் பயனர்கள் மீது கவனம் ஆகியவற்றைத் தொடர்வதும் உள்ளது. அபராதச் சீட்டைத் தவிர்க்கச் சிறந்த வழி வேக வரம்புக்குள் வாகனம் ஓட்டுவதுதான். வாகனைப் பத்திரமாக வைத்திருப்பதற்கு அனைவரும் தோள்கொடுப்போம். இதைத் தொடர்ந்து மெய்ப்பிப்பதை உறுதிப்படுத்த நாங்கள் எவ்வாறு நடவடிக்கை எடுக்கிறோம் என்பதற்கு நகரத்தின் வேகக் கட்டுப்பாட்டு கேமரா திட்டம் இன்னொரு உதாரணம்.
- மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா

**சுருக்கமான தகவல்கள்**

- ஏப்ரல் 23 அன்று வாகன் எங்கிலும் 10 சமூகப் பாதுகாப்பு மண்டலங்களில் தானியங்கி வேகக் கட்டுபாட்டு கேமராக்கல் நேரலைக்கு வந்தன.

- தானியங்கி வேகக் கட்டுப்பாடு என்பது அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் வேகக் கட்டுப்பாட்டை அமல்படுத்த ஒரு கேமராவையும் வேக அளவீட்டுக் கருவியையும் பயன்படுத்துகிற ஓர் அமைப்பு.
- நகரத்தின் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக வாகன் எங்கிலும் மொத்தம் 10 நகரும் கேமராக்கள் உள்ளன. 'நகராட்சி வேகம் காட்டும் கேமரா பயன்பாட்டில் உள்ளது' என்ற அடையாளப் பலகைகள் கேமராக்கள் இயங்கும் இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.
- நகரத்தின் MoveSmart யுக்தி வாயிலாக சாலைப் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கான பல திட்டங்களை இந்த நகரம் கொண்டுள்ளது, அவற்றில் அடங்குவன:
    - செயலூக்கத்துடன் பள்ளிக்குச் செல்லுதல்
    - சமூகப் பாதுகாப்பு மண்டலங்கள் கொள்கை (PDF)
    - நடைபாதை ஆய்வுகள்
    - சுற்றுவட்டாரப் போக்குவரத்தை அமைதிப்படுத்தும் திட்டம்
    - வேக வரம்புக் கொள்கை
    - #SlowDownVaughan
- வாகனில் பிராந்தியச் சாலைகளில் யார்க் பிராந்தியம் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளது.

**மேலும் அறிய**

- வாகன் நகரத்தின் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் இணையப் பக்கம்
- வாகன் நகரத்தின் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பின்னணி (PDF)
- வாகன் நகரத்தின் சமூகப் பாதுகாப்பு மண்டலங்கள் இணையப் பக்கம்
- யார்க் பிராந்திய தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் இணையப்பக்கம்

-30-

**வாகன் குறித்து:** வாகன் நகரம் 344,412க்கும் மேற்பட்ட மக்கள்தொகையுடன் கனடாவின் மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களுள் ஒன்று. 1991இல் தொடங்கப்பட்ட வாகனில் கான்கார்டு, கிளெய்ன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில், வுட்பிரிட்ஜ் போன்ற சமூகங்கள் அடங்கும். கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நகராட்சியானது யார்க் பிராந்தியம் மற்றும் டொரண்டோ பெரும்பாகப் பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.


**ஊடகத் தொடர்பு**: வாகன் நகரம்
Communications, Marketing and Engagement Department
905-832-2281 | corpcomm@vaughan.ca